**கொழும்பு தொழில்சார் பயிற்சி நிலையத்தினை ஸ்தாபித்தல் மற்றும் கம்பஹா தொழில்நுட்ப கல்லூரியினை திருத்தியமைத்தல் செயற்திட்டம் - 2018**

---

கொழும்பு தொழில்சார் பயிற்சி நிலையத்தினை ஸ்தாபித்தல் மற்றும் கம்பஹா தொழில்நுட்ப கல்லூரியினை திருத்தியமைத்தல் செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் கொரியா ஏற்றுமதி இறக்குமதி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2013 யூலை 23 ஆந் திகதிய 2013033/எஸ்எல்-எஸ்ஆர்ஜ-22 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், திறன்கள் அபிவிருத்தி, தொழில்வாய்ப்பு மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவராகவும் அமுலாக்கல் முகவராகவும் உள்ளது. கொழும்பிலுள்ள தொழில்சார் பயிற்சி நிலையம் மற்றும் கம்பஹாவிலுள்ள தொழில்நுட்ப கல்லூரியினை ஸ்தாபித்து அபிவிருத்தி செய்வதும் தொழில்நுட்ப மாற்றங்கள் மற்றும் பொருளாதார அபிவிருத்தியில் நிபுணர்களின் உதவியுடன் தொழில்சார் வளர்ச்சி மற்றும் மனிதவளங்கள் அபிவிருத்தியை தூண்டுவதில் முக்கிய பங்காற்றுவது செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 4,083 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 31.41 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 3,386 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 26.05 மில்லியன் கொரியா ஏற்றுமதி இறக்குமதி வங்கியால் நிதியளிப்புச் செய்யப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. மிகுதி ஐ.அ.டொலர் 5.36 மில்லியனுக்குச் சமமான ரூபா 697 மில்லியன் தொகை இலங்கை அரசினால் நிதியளிப்புச்செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2013 நவம்பர் 18 இல் தொடங்கியிருந்ததுடன், 2016 நவம்பர் 18 அளவில் பூர்த்தியாக்குவதற்கு பட்டியலப்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2018 திசெம்பர் 31 வரை நீடிப்புச் செய்யப்பட்டிருந்தது.

**1.3 அபிப்பிராயம்**

2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமையினை மற்றும் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கைக் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இற்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்கனுக்கான முகாமைத்துவத்தினதும் அவ்ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு செயற்திட்டத்தின் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டது.

## 2. பௌதீக செயலாற்றல்

### 2.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக மற்றும் நிதிச் செயலாற்றல்

கொழும்பிலுள்ள தொழில்சார் பயிற்சி நிலையம் மற்றும் கம்பஹாவிலுள்ள தொழில்நுட்ப கல்லூரிக்கான உபகரணங்கள் மற்றும் வசதிகளினை வழங்குதல், வெளிநாட்டு பயிற்சிகளினை அளித்தல், நிபுணர்களினை அனுப்புதல், பாடப்புத்தகங்களினை அபிவிருத்தி செய்தல் மற்றும் ஆலோசனை சேவைகளினை வழங்குதல் ஆகிய 05 மூலக்கூறுகளின் கீழ் செயற்திட்ட நடவடிக்கைகள் அமுல்படுத்தப்படுகின்றன. கட்டிடங்களின் மேம்படுத்தல்கள் மற்றும் நிர்மாண வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டு 2019 மே 31 இல் அமுல்படுத்தல் முகவர்க்கு கையளிக்கப்பட்டிருந்தது.

**ஒப்பந்த நிர்வாகம்**

| | கணக்காய்வு விடயம் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2013 நவம்பர் 18 இல் ஆரம்பிக்கப்பட்டு, 2016 நவம்பர் 18 அளவில் பூர்த்தியாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்ட பயிற்சி நிலைய கட்டிடங்களின் மேம்படுத்தல் மற்றும் நிர்மாண வேலைகள், பெறுகை நடைமுறைகளினை பிரயோகிப்பதிலுள்ள தாமதங்கள் காரணமாக, 2018 திசெம்பர் 31 வரை 02 சந்தர்ப்பங்களில் நீடிப்புச் செய்யப்பட்டிருந்தது. | உரிய நேரத்தில் கல்விசார் பாடநெறிகளினை ஆரம்பிக்கக் கூடியவாறு உட்கட்டமைப்பு அபிவிருத்தி வேலைகள் பூர்த்தியாக்கப்பட வில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | கல்விசார் செயற்பாடுகளினை ஆரம்பிப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | கொழும்பிலுள்ள ஒருகொடவத்த தொழில்சார் பயிற்சி நிலையத்தின் கட்டிட நிர்மாண வேலைகளின் கீழுள்ள வேலைகளின் பரப்பெல்லை அதனைத் தொடர்ந்து, 2019 ஆகஸ்ட் 31 இல் உள்ளவாறு 100 பல்வேறுபட்ட கட்டளைகளினூடாக | மதிப்பீடுகளினை மிகைத்து நிர்மாணக் கிரயம் அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறு காணப்படுகின்றமை | - மேற்படி - | எதிர்காலத்தில் அவ்வாறான நிகழ்வுகளினை இழிவளவாக்கும் பொருட்டு வடிகாலமைப்பு தொடர்பான பலவீனங்களுக்கான காரணங்கள் மற்றும் விலை வேறுபாடுகள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | மாற்றஞ்செய்யப்பட்டிருந்ததன் விளைவொன்றாக, நிர்மாண வேலைகளின் மதிப்பிடப்பட்ட கிரயம் ஐ.அ.டொலர் 8.54 மில்லியன், ஐ.அ.டொலர் 1.26 மில்லியனால் அதிகரிக்கப்பட்டிருந்தது. மேலும், ஆரம்ப கட்டிட நிர்மாண திட்டங்களில் உள்ளடக்கப்பட வேண்டுமென வேண்டப்பட்ட கேட்போர் கூடத்தின் வளிப்பதனாக்கி முறைமையின் தாபிப்பு, வடிகாலமைப்பு முறைமை, கட்டிடத்தின் உள்ளக வீதி முறைமை மற்றும் Fire door Closer Systems போன்ற வேலைகள் பல்வேறு கட்டளைகளின் கீழ் தனித்தனியாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. | | | தொடர்பான தாக்கங்களினை புலனாய்வு செய்ய வேண்டும். |
| (இ) | 2018 நவம்பர் 30 அளவில் விநியோகிக்கப்பட்டு பொருத்தப்பட வேண்டிய ஐ.அ.டொலர் 4.67 பெறுமதியுடைய ஆய்வுகூட மற்றும் கட்டிட உபகரணங்கள் 2019 மே 09 இல் மாத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தது. | கல்விசார் செயற்பாடுகளினை ஆரம்பித்தல் தாமதங்கள் ஏற்படுத்துவதற்கான சாத்தியக்கூறு காணப்படுகின்றமை | ஆய்வுகூட மற்றும் கட்டிட உபகரணங்கள், அவ்வாறான உபகரணங்களின் விபரக் குறிப்புக்களின் மாற்றங்கள் காரணமாக தாமதங்களுடன் விநியோகிக்கப் பட்டிருந்தது. | கல்விசார் செயற்பாடுகளினை ஆரம்பிப்பதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |